# திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஜுன் 10-ம் தேதி முதல் ஜுன் 14-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (5.6.15- 8.6.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 -37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| வானம் (ஆக்டா) | 2- 3 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 66- 70 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 44- 53 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 |
| காற்றின் திசை | 0 |

**14.6.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>10.6.15 | நாள் 2<br>11.6.15 | நாள் 3<br>12.6.15 | நாள் 4<br>13.6.15 | நாள் 5<br>14.6.15 |
| மழை (மி.மீ.) | 3 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37 | 37 | 37 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 66- 70 | 66- 70 | 66- 70 | 66- 70 | 66- 70 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ மேற்கு | 2/ மேற்கு | 2/ மேற்கு | 2/ மேற்கு | 2/ மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | நாற்று பருவம் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல்லுக்கு தழைச்சத்தை இலைவண்ண அட்டையை பயன்படுத்தி இடவும். நெல்லில் துரித தூர்கட்டும் பருவம் முக்கியமான பருவமாதலால் இப்பருவத்தில் தழைச்சத்து இடுவது மிகவும் அவசியம். |
| பாசிப்பயறு (இறவை) | விதைத்தல் | இறவையில் பாசிப்பயறு சாகுபடிக்கு மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்ட இரகங்களான VBN 2, VBN 3 மற்றும் |

| | | |
|---|---|---|
| | | CO (Gg) 7 ஆகிய இரகங்களை தேர்வு செய்யவும். விதை நேர்த்தி செய்ய ஒரு பாக்கெட் (200 கி/ எக்டர்) ரைசோபியம் சி.ஆர். எம். 6, ஒரு பாக்கெட் (200 கி/ எக்டர்) பாஸ்போபாக்டீரியா மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிவிக்கும் பாக்டீரியாக்கள் ஒரு பாக்கெட் (200 கி/ எக்டர்) ஆகியவற்றுடன் ஆறிய கஞ்சி கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.<br><br>நடவு வயலில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நுண்உரக் கலவை எக்டருக்கு 5 கிலோவை ஊட்டமேற்றிய தொழுஉரமாக அளிக்கவும் (ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்க 1:10 என்ற விகிதத்தில் நுண்உரக் கலவை மற்றும் தொழுஉரத்தை கலந்து ஒரு மாதம் நிழலில் உலர்த்தவும்).<br><br>அடியுரமாக 25: 50: 25 கிலோ/ எக்டர் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும். மேலும் 20 கிலோ கந்தக சத்து மற்றும் 25 கிலோ ஜிங்க் சல்பேட் ஆகியவற்றை இடவும். |
| வாழை | பூமொட்டு உருவாகும் பருவம் | வாழையில் பக்கக்கன்றுகளை அகற்றவும். களைகளை கட்டுப்படுத்தி மண்ணில் காற்றோட்டத்தை மேம்படுத்துவதற்காக மண்வெட்டி கொண்டு வெட்டவும்.<br>வாழையில் பூ மொட்டு உருவாகும் பருவம் முக்கியமான பருவமாதலால் மகசூலை மேம்படுத்துவதற்கு உரமிடுவது மிகவும் அவசியம். வாழைக்கு ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 5 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். நட்ட 71- 156 ம் நாள் வரை ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 0.8 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 17.7 கிலோ/ எக்டர், 0- 0- 50 உரம் 15.9 கிலோ/ எக்டா மற்றும் யூரியா 16.4 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

குறுஞ்செய்தி- மழை: ஜுன் 10: 3 மி.மீ. வாழையில் பக்கக்கன்றுகளை அகற்றவும். களைகளை கட்டுப்படுத்தி மண்ணில் காற்றோட்டத்தை மேம்படுத்துவதற்காக மண்வெட்டி கொண்டு வெட்டவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி